புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • டிசம்பர் 05, 2024 • புரட்சி 24 • முழக்கம் 48 • விலை ரூ.3.00

# அய்.அய்.டி, அய்.அய்.எம்–களில்

# 90 சதவீதப் பேராசிரியர்கள், பார்ப்பனர்கள்

உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 சதவீத ஒதுக்கீடு சட்டத்தை நான்கே நாட்களில் அவசர அவசரமாகக் கொண்டுவந்தது ஒன்றிய ஆட்சி. ஆண்டுக்கு ரூ.8 இலட்சத்துக்கு குறைவான வருமானம் நிர்ணியிக்கப்பட்டது. பொய் சான்றிதழ் தந்து பார்ப்பனர்கள், மருத்துவக் கல்லூரிக்குள் நுழைந்துள்ளார்கள் என்பது அம்பலமாகியுள்ளது. எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற இந்த உயர்ஜாதி 120 ஏழைகள், ஆண்டுக்கு ரூ.90 லட்சம் நன்கொடை தந்து தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மேல் பட்டப் படிப்புகளில் சேர்ந்துள்ளனர். இதை டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு அம்பலப்படுத்தியுள்ளது.

அய்.அய்.டி, அய்.அய்.எம். போன்ற ஒன்றிய ஆட்சியின் கீழ் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்களில் பேராசிரியர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு பட்டை நாமம் போட்டுள்ள செய்தி ஆதாரத்துடன் அம்பலமாகியுள்ளது.

அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் மாணவர் சங்கத் தலைவர் கவுடா கிரன், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்றுள்ள புள்ளிவிவரங்களை ‘இந்து’ ஆங்கில நாளேடு (டிசம்பர் 2, 2024) வெளியிட்டுள்ளது. இது இந்த ஆண்டு செப்டம்பர் 2024 நிலவரம்.

பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம், பட்டியல் பிரிவுக்கு 15 சதவீதம், பழங்குடியினருக்கு 7.5 சதவீதம் ஒதுக்கீடும் பின்பற்ற வேண்டும் என்பது சட்டம்.

ஆனால் பொதுப் போட்டியில் இடம்பெறும் பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதியினர் மட்டும் 90 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் அதிர்ச்சியான தகவல் வெளிவந்துள்ளது. இரண்டு அய்.அய்.டி.களிலும், மூன்று அய்.அய்.எம்.களிலும் பார்ப்பன உயர்ஜாதிப் பேராசிரியர்கள் 90 சதவீதத்துக்கும் அதிகம்.

இந்தூர் அய்.அய்.டி.யில் மொத்தமுள்ள 109 பேராசிரியர்களில் பார்ப்பனர், உயர்ஜாதியினர் எண்ணிக்கை 106 (97.2 சதவீதம்) பட்டியலினம் , பழங்குடிப் பிரிவைச் சார்ந்த ஒரு பேராசிரியர் கூட இல்லை.

உதய்ப்பூர் அய்.அய்.எம் நிறுவனத்தில் பார்ப்பன உயர்ஜாதியினர் 90 சதவீதத்துக்கும் கூடுதல். லக்னோவில் 95 சதவீதம். 6 அய்.அய்.எம்களில் பட்டியல் பிரிவோ, பழங்குடி பிரிவோ ஒருவர் கூட இல்லை. பெங்களூரு அய்.அய்.எம் நிறுவனத்தில் 85 சதவீதம் பார்ப்பனர், இங்கு இட ஒதுக்கீடு உரிமைக் கேட்டுப் போராட்டமே நடந்தது.

அய்.அய்.டி. மும்பை, அய்.அய்.டி. காரக்பூரில் 700 பேராசிரியர் பதவிகளில் 90 சதவீதம் பேர் பார்ப்பனர் - உயர்ஜாதியினர்.

ஒட்டுமொத்தமாக 21 அய்.அய்.டி.களில் பொதுப்பிரிவு, அதாவது பார்ப்பன உயர் ஜாதியினர் 80 சதவீதத்துக்கும் அதிகம். பட்டியல் பிரிவு 6 சதவீதம் (தரப்பட வேண்டியது 15 சதவீதம்) பழங்குடியினர் 1.6 சதவீதம் (தரப்பட வேண்டியது 7.2 சதவீதம்)

7 அய்.அய்.எம்.களில் 250 பதவிகள் நிரப்பப்படவில்லை. இதில் 88 பிற்படுத்தப்பட்டோருக்கும், 54 பட்டியலினத்தவருக்கும், 30 பழங்குடியினருக்கும் தரப்பட வேண்டும்.

ஒவ்வொரு நிறுவனத்திலும் இட ஒதுக்கீட்டு அளவீடுகளை தனித்தனியாக விரிவாகத் தந்துள்ளது இந்து ஆங்கில நாளேடு. இதுதான் மோடி ஆட்சியின் சமூகநீதி அவலம்.

# நங்கவள்ளியில் பெரியாரியல் பயிலரங்கம்

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 01.12.2024 ஞாயிறு அன்று ரங்கண்ணா திருமண மண்டபத்தில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை ஒரு நாள் பயிலரங்கம் சிறப்பாக நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் தொடங்கிய இந்தப் பயிலரங்கிற்கு நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பயிலரங்கின் முதல் அமர்வாக, கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் “திராவிடர் இயக்கத்திற்கு முன் பார்ப்பனர் அல்லாதார் நிலை” எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார்.



மதியம் 12.00 - 12.30 தேநீர் இடைவேளைக்குப் பிறகான அமர்வில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி “நூற்றாண்டு கண்ட திராவிடர் இயக்கம்” எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார்.

மதிய உணவு 2.00-3.00 இடைவேளைக்கு பின் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி “திராவிடர் இயக்கத்தில் பெண்களின் பங்களிப்பு” எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார். மாலை 4.30- 5.00 தேனீர் இடைவேளைக்கு பிறகான கேள்வி-பதில் உரையாடலில் தோழர்களின் கேள்விகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பதிலளித்து பயிலரங்கத்தை நிறைவு செய்தார்.

நிறைவாகக் கழக இளைஞரணி சேலம் மாவட்டச் செயலாளர் பிரபாகரன் நன்றி கூறினார். பயிலரங்கத்தில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர், பங்கேற்ற தோழர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

கழகத்தின் கொடிகளைச் சாலைகளில் கட்டியும், பிரச்சாரம் செய்தும் சிறப்பான பயிலரங்கத்தை நங்கவள்ளி ஒன்றியத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

பயிலரங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக கிருஷ்ணன், பிரபாகரன், சந்திரசேகர், செந்தில்குமார், உமாசங்கர், காவை ஈசுவரன், விஜயகுமார், இளவரசன், சிவசண்முகம், நாகராஜ் ஆகியோர் மிகச் சிறப்பாக களப்பணி செய்திருந்தனர்.

(பயிற்சி வகுப்பிற்கான வீடியோ, புகைப்படம், துண்டறிக்கை, பிளக்ஸ் வடிவமைப்பு கபிலன் ஸ்டூடியோ விஜயகுமார், இளவரசன்)

உணவு ஏற்பாடு - மேச்சேரி சுதர்சன், கழக சேலம் மாவட்டப் பொருளாளர் மேட்டூர் சம்பத், நங்கவள்ளி நல்லபிரபு - அய்யந்துரை தி.மு.க, ஆசிரியர் மல்லிகுந்தம் தினேஷ், தோழர் வீரமணி.

## புலியூரில் “மாவீரர் நாள்”




ஈழ விடுதலை ஆதரவு ஒருங்கிணைப்புக் குழு சார்பாக “மாவீரர் நாள்” பொதுக்கூட்டம், 27.11.2024 அன்று கொளத்தூர், புலியூர் பிரிவில் உள்ள தளபதி பொன்னம்மான் நினைவு நிழற்கூடத்தில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியானது சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமையிலும், ஒன்றியத் தலைவர் செ.தர்மலிங்கம், புலியூர் த. சரவணன், மு. சிவக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்த்தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு, மரண தண்டனை எதிர்ப்புப் போராளி அற்புதம் அம்மாள், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் மாவீரர் நாள் உரையாற்றினார்கள்.

நிறைவாக சென்னியப்பன் நன்றி கூறினார். மாவீரர் நாள் நிகழ்வில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தலையங்கம்

# ‘கர சேவைகள்’ தொடர் கதையா?

பாபரி மசூதியை இடித்து ‘கர சேவை’ நடத்திய சங் பரிவாரம் இப்போது அடுக்கடுக்காக மசூதிகளைக் குறிவைக்கத் தொடங்கியுள்ளனர்.

கடந்த ஜனவரியில் காசியில் உள்ள ஞானவாபி மசூதியைக் குறிவைத்தார்கள். அது சிவன் கோயிலை இடித்துக்கட்டிய மசூதி என்று 2020இல் இந்து அமைப்புகள் நீதிமன்றம் சென்றது. வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம் இந்து தரப்பு வாதங்களை ஏற்றது. ஆணையர் ஆய்வுக்கு உத்தரவிட்டது. (அட்வகேட் கமிஷனர்) அது இந்து கோயில் தான் என்று ஆணையர் அறிக்கை தந்தார். அது நீரூற்று என்ற இஸ்லாமியர் தரப்பு வாதம் புறக்கணிக்கப்பட்டது. ஞானவாபி மசூதிக்குள் ‘சிவன்’ கோயில் இருந்ததாகக் கூறப்படும் குறிப்பிட்ட இடத்தை மசூதியிலிருந்து தனியாகப் பிரித்து சீல் வைக்க மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து ஒன்றிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தொல்லியல்துறை ஆய்வு கோரப்பட்டது. ஒன்றிய ஆட்சி அனுமதித்தது. இஸ்லாமியர்கள் நீதிமன்றம் சென்றனர். நீதிபதி சந்திர சூட் தலைமையிலான மூவர் அமர்வு தொல்லியல் ஆய்வுக்கு அனுமதி தந்தது. இது சட்டத்துக்கு எதிரான தீர்ப்பு. முற்போக்கு முகமூடி அணிந்து கொண்டிருந்த தலைமை நீதிபதி சந்திர சூட், ‘இந்துத்துவா வெறியாட்டத்துக்கு துணை நின்றார் என்பதை அம்பலப்படுத்தியத் தீர்ப்பு என்றே இதைக் கூற வேண்டும்.’

1991 வழிபடும் இடங்களுக்கான சட்டம் (Place Of Worship Special Provision Act 1991) வழிபாட்டு இடங்களை உறுதி செய்தது. அதன்படி 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதியில் இருந்து எந்தெந்த இடங்களில் கோயில், மசூதி, சர்ச்சுகள் உள்ளிட்ட வழிபாட்டு இடங்கள் இருந்ததோ, அதை மாற்றக்கூடாது என்று அந்தச் சட்டம் கூறியது. அந்தச் சட்டத்தில் ஓட்டையைப் போட்டு மாபெரும் துரோகத்தைச் செய்தது நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒவ்வொரு மசூதியாக இந்துத்துவா சக்திகளால் குறிவைக்கப்படுகின்றன. தொடர்ந்து உ.பி. மாநிலம், சாம்பல் மாவட்டம் சந்தூசியில் உள்ள ‘ஷாஹி ஜமா மஸ்ஜித்’தை இடிக்க வேண்டும் என்றும் அங்கே சிவன் கோயில் இருந்தது என்றும் நீதிமன்றம் சென்றார்கள். மனுத்தாக்கல் செய்த அன்றே மாவட்ட நீதிமன்றம் வழக்கறிஞர் – அரசு அதிகாரிகள் – குழுவினரின் ஆய்வுக்கு உத்தரவிட்டது. இஸ்லாமிய தரப்பினரிடமிருந்து, நீதிமன்றம் எந்த விளக்கமும் கேட்கவில்லை. உள்ளூர் முஸ்லீம்கள் எதிர்த்தனர். முதல்முறை ஆய்வில் எதிர்க்கவில்லை, இரண்டாம் முறையாகவும் ஆய்வுக்கு வந்த போது கலவரம் வெடித்தது. துப்பாக்கிச்சூட்டில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். இப்போது உச்சநீதிமன்றம் தலையிட்டு ‘இந்துத்துவா’ தொடர் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ளது.

தொடர்ந்து ராஜஸ்தானில் உள்ள அஜ்மீர் தர்கா, சிவன் கோயில் என்று வழக்கு போட்டு தொல்லியல் ஆய்வுக்கு நீதிமன்ற ஒப்புதலையும் பெற்றுள்ளனர். இது பழமைவாய்ந்த உலகப் புகழ்பெற்ற புனிதத் தலமாகக் கருதப்படுகிறது. மசூதிகளை இந்துக் கோயில்களாக மாற்றியமைக்கும் மதவெறி நடவடிக்கைகளுக்கு நீதிமன்றங்கள் உடனே அனுமதிக்கின்றன. ஒன்றிய ஆட்சியின் தொல்லியல்துறை, உடனே வாசலில் வந்து நிற்கிறது.

இந்த நிலையில் இந்தியாவில் சிறுபான்மை மக்களை நசுக்கிவரும் ஒன்றிய ஆட்சி, வங்கதேசத்தில் சிறுபான்மை இந்துக்களின் பாதுகாப்புக்குக் குரல் கொடுக்கிறது. சிறுபான்மையினர், எந்தப் பிரிவாக இருந்தாலும் ஒடுக்கப்படுவதை ஏற்கமுடியாது. ஆனால் அதற்கான தார்மீக உரிமையை மோடியின் பா.ஜ.க. ஆட்சி இழந்துவிட்டது. மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட வங்கதேச முன்னாள் அதிபர் ஹசீனாவுக்கு பா.ஜ.க. ஆட்சி அடைக்கலம் தந்துள்ளது. இது வங்கதேச மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. அடைக்கலம் தேடிவந்தவர் ‘இந்துக்களுக்காக’ இந்தியாவில் இருந்து குரல் கொடுப்பதும், வங்கதேச அரசைக் கண்டிப்பதும் வங்கதேசத்தின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டுள்ளது. மோடி ஆட்சி இதற்கு எப்படி அனுமதிக் கொடுத்தது? அண்டை நாடுகளின் உறவுகளை மதவாதக் கண்ணோட்டத்துடனே அணுகுவதால், மோடி ஆட்சி இந்த விலை கொடுக்க வேண்டியுள்ளது.

வங்கதேச இந்துக்களுக்காக அய்.நா.வில் புகார் அளிக்கும் பா.ஜ.க. ஆட்சி. இங்கே ஒவ்வொரு நாளும் வதைபடும் சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு என்ன பதில் கூறப் போகிறது?

# வருகிறார் ‘தத்துவப் போராளி’

அவதூறு ஆபாசப் பேச்சுகளுக்காக ஒரு வருடம் சிறைத் தண்டனைப் பெற்றுள்ளார் ‘ஆன்டி இந்தியன்’ ராஜா. ‘குற்றம்சாட்டப்பட்டவர்’ என்ற நிலையில் இருந்து ‘குற்றவாளி’ என்ற பதவி உயர்வை நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. சொந்தக் கட்சியில் கிடைக்காத ஒன்று, நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. பிணையில் வெளிவந்துள்ள ‘குற்றவாளி’ நீதிமன்ற வாசலில் ‘போர் முழக்கம்’ செய்திருக்கிறார்.

“திராவிடன் ஸ்டாக்குகளுக்கு எதிரான எனது தத்துவார்த்தப் போராட்டம் தொடரும்” என்கிறார். ‘சூனாபானா’ வடிவேலு மீசையை முறுக்குகிற காட்சிதான் நினைவுக்கு வருகிறது.

அண்ணா, நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையில் பயன்படுத்தியச் சொல் ‘திராவிடன் ஸ்டாக்’ அதைத்தான் ‘இந்தக் காமெடி’ பார்ப்பனர் தொடர்ந்து கொச்சைப்படுத்திவருகிறார்.

“2018இல் லெனினுக்கும் இந்தியாவுக்கும் என்ன தொடர்பு? திரிபுராவில் லெனின் சிலை உடைக்கப்பட்டது சரி; தமிழ்நாட்டில் ஈ.வெ.ரா சிலை” என்று ‘ட்வீட்’ ஒன்றை போட்டார். பா.ஜ.க. தலைவர் தமிழிசையும், பொன்.ராதாகிருஷ்ணனும் இது பா.ஜ.க. கருத்து அல்ல அவரது சொந்தக் கருத்து என்று முகத்தில் கரியை அப்பினார்கள். பிறகு இந்தத் தத்துவார்த்தப் போராட்ட சிங்கம், அது நான் போட்டது அல்ல; என் ‘அட்மின்’ போட்டார் என்று கர்ஜித்தது. இப்போது இந்த “பிராமணாள்” நான் அப்படி பெரியார் பற்றிய பதிவிற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று நீதிமன்றத்தில் ‘பல்டி’ அடித்தது.

“ஆமாம். நான் அப்படித்தான் பேசினேன், எதிர் வழக்காடப் போவது இல்லை. நீதிமன்றம் எந்த அளவுக்கு அதிகபட்ச தண்டனை தருமோ, தரட்டும், ஏற்கத் தயார்” இதுதான் ஒவ்வொரு வழக்கையும் பெரியார் எதிர்கொண்ட முறை. பெரியார் நடத்திய வீரம் செறிந்த தத்துவப் போராட்டம்.

இந்த ‘கோமாளி’ பெரியாரை தரம் தாழ்ந்து பேசுகிறது.

ஒன்றியத்தில் தங்களுக்கு சாதகமான ஆட்சி என்ற திமிரில் “நீதிமன்றமாவது மயிராவது” என்று பேசிவிட்டு, பிறகு நீதிமன்றம் போய், “அய்யா, மன்னித்துக்கொள்ளுங்கள்” என்று மண்டியிட்ட “மாவீரன்” தான் இந்த “ஆன்டி இந்தியன்”

இந்தத் தத்துவார்த்த சிங்கம், வேத காலங்களில் ஜாதிப் பாகுபாடுகளே கிடையாது என்று அதிரடியாக ஒரு பேட்டியளித்தது. கல்கி கிருஷ்ணமூர்த்தி எனும் ‘பிராமணர்’, எம்.எஸ்.சுப்புலட்சுமி என்ற கலைஞர் ஜாதியைச் சார்ந்த பெண்ணைத் திருமணம் செய்தார். அந்தத் திருமணத்தை எவரும் எதிர்க்கவில்லையே” என்ற ஒரு குண்டை வீசியது. நல்லவேளை ’கல்கி’ கிருஷ்ணமூர்த்தி குடும்பம் உயிருடன் இல்லை; இருந்திருந்தால் குடும்பத்தில் பெரும் குழப்பம் வெடித்திருக்கும். எம்.எஸ்.சுப்புலட்சுமி கணவர், ‘கல்கி’ சதாசிவம். கல்கி கிருஷ்ணமூர்த்தி அல்ல. கணவரையே மாற்றிய ‘அறிவுஜீவி’ இதற்கு அட்மின் பேர் கூறி தப்பிக்க முடியாது.

“வேதத்தை எழுதிய வேத வியாசர் ஒரு மீனவர்; வேதம் ஜாதிப் பார்த்ததா?” என்று மற்றொரு ‘அதிர்ச்சி’ தந்தார்.

‘அய்யா, தத்துவப் போராளியே, வேத வியாசர் எழுதியது மகாபாரதம்; இதுகூடவா தெரியாது’ என்று கேட்டால், “நீ திராவிடன் ஸ்டாக்” அப்படித்தான் பேசுவாய் என்று வேத மொழியில் (அதாவது கெட்ட வார்த்தைகளில்) மந்திரம் ஓத ஆரம்பித்துவிடுவார்.


அண்ணாமலை தலைவராக வந்தவுடன் கட்சிக்குள் ஒரு ‘களை’ எடுப்பு நடந்தது. ‘பூணூல்களை” முகம் காட்டவிடாமல் ஓரம் கட்டிவிட்டார். பாஜகவின் பூணூல் முகத்தை மாற்றி “பிற்படுத்தப்பட்டோர்” முகமூடி போட்டு கட்சி நடத்துகிறார் அண்ணாமலை. பா.ஜ.க.வுக்குள் பார்ப்பன இனப்படுகொலை நடக்கிறது என்று புலம்புகிறார் எஸ்.வி.சேகர்.

‘ஆரிய ஸ்டாக்’ சர்மா ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நீர் சித்தாந்தப் போராட்டம் நடத்த வேண்டியது, உங்கக் கட்சிக்குள் தான். கே.டி ராகவன் ஆதரவுக்கரம் நீட்ட மாட்டார். நாராயணன் திருப்பதியும், கேசவ விநாயகமும் பதுங்கிவிடுவார்கள். காஞ்சி விஜயேந்திரன் வேண்டுமானால் ஆதரவு தரலாம். அதுவும் அவர் ‘மவுனநிலை’யில் இல்லாமல் இருக்க வேண்டும்.

– கோடங்குடி மாரிமுத்து

## மக்களை ஏமாற்றும் கடவுள் பக்தி



கடவுள் மத உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும், சமத்துவ வாழ்விற்கும், இவ்வளவு இடையூறுகளுக்கும், தாரதம்மியங்களுக்கும் இடந்தராதிருக்குமானால் அவைகளைப் பற்றி இவ்வளவு கவலை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடவுள், மதப் பிரச்சாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்துபவர்களின் பரிதாபத்திற்காகவாவது நான் சும்மா விட்டுவிடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில், ஒரு மனிதன் அனாவசியமாய் அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக, பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் அதனால் பாமர மக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப் பார்க்கும் போது உண்மையான உணர்ச்சியுள்ளவன் அதை ஒழிக்கப் போராடாமல் இருக்க முடியாது.


– குடிஅரசு 20.11.1932

# திராவிடத்தை ஆதரித்த ‘தமிழ்த் தென்றல்’ திரு.வி.க

**சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.10.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் திறந்து வைத்து ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

## விடுதலை இராசேந்திரன்





பார்ப்பன எதிர்ப்புப் புள்ளியில் ஒன்றுபட்டாலும் சைவப் பெருமையைச் சுயமரியாதை இயக்கம் ஏற்கவில்லை. இது குறித்து ஆ.இரா.வேங்கடாசலபதி தனது நூலில் இவ்வாறு விளக்குகிறார்.

இந்தி எதிர்ப்புப் போர் நடந்து முடிந்த சில காலத்திற்குள், சைவர்கள் ஒன்றுகூடி தமிழர் திருமண மாநாட்டைச் சென்னையில் 16, சூலை 1939இல் கூட்டினர். பார்ப்பனச் சடங்கு எதிர்ப்பு, பகுத்தறிவுச் சார்பு, தந்தை வழிச் சமூக ஆணாதிக்கத்தை எதிர்த்தல் என்ற விரிந்த கொள்கை அடிப்படையில் சுயமரியாதை இயக்கம் முன்வைத்த வாழ்க்கை ஒப்பந்தம் என்ற மண உறவுக்கு மாற்றாகச் சைவர், தமிழ்த் திருமணம் என்ற கோட்பாட்டை முன்னெடுத்தனர். பிராமணப் புரோகிதர்களைக் கொண்டு வட மொழி மந்திரங்களை ஓதி ஆரிய முறைப்படி நடத்திவைக்கப்பட்ட திருமண முறையைச் சைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், திருமணம் என்பது ஒப்பந்தம் தான், தாலி என்பது அடிமைச் சின்னம் என்பது சுயமரியாதைத் திருமணத்தின் புரட்சிகரக் கூறுகளை ஒப்புக்கொள்ளவில்லை. சுருக்கமாகச் சொல்வதனால் அந்தணப் புரோகிதர்களின் இடத்தில் சைவப் பெரியோர், வடமொழி மந்திரங்களுக்கு மாற்றாகத் தமிழ்ப் பாடல்கள் என்பதே சைவர்கள் உருவாக்கிய தமிழ்த் திருமண முறை ஆகும்.

இவ்வாறு தமிழ்த் திருமணம் வரையறுக்கப்பட்ட மாநாட்டில், இந்தி எதிர்ப்புப் போரில் சுயமரியாதை இயக்கத்தோடு மேடையைப் பகிர்ந்துகொண்ட அதே கா.சு.பிள்ளையும், ச.சோமசுந்தர பாரதியாரும், த.வே. உமாமகேசுவரன் பிள்ளையும் கலந்துகொண்டனர் என்பது மனங்கொள்ளத்தக்கது.

இதற்கடுத்து, 1940 அக்டோபரில் தமிழர் சமய மாநாடு சைவப் பெரியோரால் சென்னையில் கூட்டப்பட்டது. இதிலும் மறைமலையடிகள், கா.சு.பிள்ளை, ச.சோமசுந்தர பாரதியார், த.வே. உமாமகேசுவரன் பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு, தமிழர் சமயம் என்ற கோட்பாட்டுக்கு முழு உருவம் கொடுத்தனர். ஆரியர் வருகைக்கு முன்பு தமிழ்ச் சமூகம் சமயங்களற்றிருந்தமையால் ஏற்றத்தாழ்வில்லாத பொதுமைச் சமூகமாக விளங்கியது என்ற சுயமரியாதை இயக்கத்தின் வரலாற்றுக் கருத்தாக்கத்தில் ஆரியரால் ஏற்பட்ட சீரழிவு என்ற ஒரேயொரு கூறினை மட்டும் ஏற்றுக்கொண்டு, சைவமே பண்டைத் தமிழரின் சமயம் என்றும், அக்காலத்தில் வேளாளர் நாகரீகமே நிலவியது என்றும் தம் நலன்களுக்கு உகந்த வகையில் தமிழர் சமயத்துக்கு ஒரு உருவம் கொடுத்தனர். தமிழர்கள் தங்கள் மதத்தைக் குறிப்பிடும் போது “இந்துமதம்” எனாமல் “தமிழர் சமயம்” என்று கூற வேண்டும் என்றும், வாழ்க்கைச் சடங்குகளையும் கடவுள் வழிபாட்டையும் ஆரிய முறையில், ஆரிய மொழிவழி, ஆரியப் புரோகிதரைக் கொண்டு நடத்துவதை விடுத்து, அவற்றைத் தமிழ்மொழிக் கொண்டு தமிழ் முறையில் தாமே நடத்திக்கொள்ள வேண்டும் என்றும் மாநாடு தீர்மானித்தது. பிரித்தானியக் காலனியாதிக்க அரசினால் இயற்றப்பட்ட இந்துச் சட்டங்கள் ஆரியச் சார்பின என்றும் கண்டிக்கப்பட்டன. இதனிடையில் சில சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் மாநாட்டுக்குள் புகுந்து தீர்மானங்களை விவாதிக்கத் தொடங்கினர். இதனால் குழப்பம் ஏற்பட்டு பின்னர் அடங்கியது.

இவ்வாறு சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் சைவக் கூட்டங்களில் புகுந்து விவாதத்தைக் கிளப்புவதும், அதனால் கூட்ட ஒழுங்கு குலைந்து குழப்பம் ஏற்படுவதும் இடையிடையே நிகழ்ந்தன. 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற செந்தமிழ் மாநாட்டில் மறைமலையடிகள் பேச முற்பட்ட போது இரா.நெடுஞ்செழியன் இடையிட்டு, “சைவ சமயம் பற்றியும், கோயில் வழிபாட்டு முறைப் பற்றியும் மனதைப் புண்படுத்தும் வகையில்” பேசினார் என்றும் அறிய முடிகிறது.

சுயமரியாதை இயக்க, சைவர் மோதலின் இறுதிச் சுற்று என்று சொல்லத்தகும் விவாதம் 1943இல் நடந்தது. கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் கொளுத்த வேண்டும் என்று சுயமரியாதை இயக்கம் தீர்மானித்த போது, அதற்குச் சைவரிடையே இருந்து கிளம்பிய எதிர்ப்பு 1920களின் பிற்பகுதியினதோடு ஒப்பிட்டால் கீசுகீசென்றே ஒலித்தது. அரிய சமய இலக்கிய நூல்களைக் கொளுத்த முற்படுவது “கொடுஞ்செயல்” என்று வருணித்த பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போல் சிலரே எதிர்க்குரல் கொடுத்தனர்.

இதன் தொடர்பாகப் பொது மேடையில் நடந்த விவாதத்தில் அண்ணாவுக்கு எதிராகச் சோமசுந்தர பாரதியும், ரா.பி.சேதுப்பிள்ளையும் வாதாடினர். அண்ணாவின் மேடைத் தமிழே வாகை சூடியது என்று பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட அவ்விவாதத்தில், எதிர் வழக்காடிய சோமசுந்தர பாரதியும், சேதுப்பிள்ளையும் சமயக் காரணங்களைக் காட்டாமல் இலக்கிய அளவுகோல்களையே முன்வைத்தனர். இவ்விருவரும் சைவராக இருந்த போதிலும், விவாதத்தில் பெரிய புராணமன்றிக் கம்பராமாயணமே முதன்மைபெற்றது என்று படம் பிடிக்கிறார் ஆ.இரா. வேங்கடாசலபதி.

### பெரியார் – திரு.வி.க.

பெரியாருக்கும், திரு.வி.க.வுக்குமான நட்பு 1919-1953 வரை நீடித்தது. இருவருமே காங்கிரஸ் கட்சியில் ஒன்றாகப் பயணித்தவர்கள். சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையின் போது பெரியாருக்கு ஆதரவாக நின்றார். தனது தேச பக்தன் ஏட்டில் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் பிரச்சனையை கூர்மைப்படுத்துவதை இயக்கமாக நடத்துவதை விரும்பவில்லை, அது தேசத்துக்கு விரோதமான கருத்து என்று குறிப்பிட்டிருந்தார். அந்தப் பத்திரிகையில் நீதிக்கட்சியை எதிர்த்துக் கடுமையாக எழுதினார். அதற்குப் பெரியார் இயக்க ஏடுகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. அப்போது இரு தரப்புக்கும் இடையில் கருத்துப் போராட்டங்கள் நடந்து கொண்டு இருந்தது.

1925ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தைக் கொண்டுவந்த போது அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர் திரு. வி.க. வகுப்புவாரித் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று பெரியாருக்கு உறுதியளித்த திரு.வி.க, தீர்மானம் நிறைவேற்றும் போது அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்து விட்டார். அதனால் ஆத்திரமடைந்த பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார் என்பது வரலாறு.

> **கொள்கைகளை முன்னெடுப்பதில் வரலாற்று அணியை உருவாக்கியவர் பெரியார்.**

1925ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்ட திருவிக, 1927இல் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்கவில்லை. கிட்டத்தட்ட 1937இல் இருந்து 1944 வரை காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகியே இருந்தார். பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பில் இருக்கும் நியாயத்தை உணர்ந்த திருவிக 1944க்கு பிறகு பெரியாருடன் கை கோர்த்தார். பெரியாருடன் இணைந்தப் பிறகு சுயமரியாதை இயக்கத்தின் தந்தை, பெரியார் என்றால், நான் தாய். எங்களுக்கு பிறந்தக் குழந்தை தான் சுயமரியாதை இயக்கம் என்றார்.

திரு.வி.க, 1947இல் கடலூரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் பெரியாரின் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். திரு.வி.க. ஈரோடு வருகிற போதெல்லாம் பெரியாரின் இல்லத்தில் தான் தங்குவார். அங்கு தங்கும் சமயத்தில் அவர் காலையில் எழுந்தவுடன் பூஜை செய்வதற்கு தேவையான பொருட்களையெல்லாம் வாங்கி வைத்துவிட்டு அவர் வழிபடுவதற்கான ஏற்பாடுகளை செய்தவர் பெரியார். 1953இல் திராவிட நாடு பிரிவினை மாநாடு ஈரோட்டில் நடந்த போது “திராவிட நாடு” படத்தைத் திறந்துவைத்தவர் திரு.வி.க. ஒரு கட்டத்தில் பெரியாரைக் கடுமையாக எதிர்த்துவந்த குன்றக்குடி அடிகளார், மறைமலை அடிகளார் மற்றும் திரு.வி.க ஆகியோர் பின்னாளில் பெரியாருடன் இணைந்துப் பணியாற்றியது குறிப்பிடத்தக்க ஒன்று.

சேரன் மாதேவி குருகுலத்தில் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவதில் இருந்த வேறுபாடுகளைக் கண்டு கொதித்தெழுந்தப் பெரியார், அதற்கு முன்பு காங்கிரஸ் கட்சியில் இருந்த சமயத்தில் பெரியகுளம், குற்றாலம் உள்ளிட்ட ஊர்களுக்கு சென்றார். அப்போது பார்ப்பனர் வீட்டில் தங்கினார். அங்கே அவருக்கு தனி இடத்தில் உணவு பறிமாறப்பட்டது. காலையில் போட்ட எச்சில் இலை அப்படியே இருக்கும் சூழலில் மதியம் அதே இடத்தில் இலை போட்டு சாப்பாடு போட்டார்கள். இந்த சம்பவங்களை பல இடங்களில் பகிர்ந்து கொண்ட பெரியார் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை.

தனக்கு நேர்ந்த அவமானம் குறித்து பெரியார் கவலைப்படவில்லை. ஆனால் சேரன்மாதேவி குருகுலத்தில் ‘வர்ணப் பாகுபாடு’ அமைப்புரீதியாக அமல்படுத்தப்பட்ட போது பெரியார் கொதித்து எழுந்தார்.

திராவிடர் கழகத்தின் 19வது மாநாடு ஈரோட்டில் நடந்தது. அதில் ‘திராவிட நாடு’ படத்தைத் திறந்து வைத்து, திராவிட நாட்டுப் பிரிவினைக்கும், திராவிடக் கருத்தியலுக்கு வலிமை சேர்க்கும் உரையை நிகழ்த்தினார்.

> “இந்தியா வென்பது பெரிய நாடு. இதில் பல திறப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள் என்றாலும் இந்நாட்டில் பெரிய கலாச்சாரங்களே அடிப்படைக் கலாச்சாரங்களாகக் காணப்படுகின்றன. இவை இரண்டும் பெரிதும் முரண்பட்ட கலாச்சாரங்களாகவும் இருந்து வருகின்றன. இவற்றுள் ஒன்று ஆரிய கலாச்சாரமாகும். மற்றொன்று திராவிட கலாச்சாரமாகும். வட நாட்டில் பெரும்பாலும், ஆரிய கலாச்சாரமும் தென்னாட்டில் பெரும்பாலும் திராவிட கலாச்சாரமும் நிலவி வருகின்றன.
>
> இவற்றுள் ஆரிய கலாச்சாரம் சுரண்டலையும் ஏமாற்றுதலையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதைப் பின்பற்றி வருபவர்கள் தமது சுரண்டலுக்காக அந்நிய நாடுகளை ஆக்கிரமிக்கும் எண்ணம் கொண்டு முயற்சி செய்து வருகிறார்கள்.
>
> திராவிட கலாச்சாரம் சமதர்மத்தை, சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதால் அதைப் பின்பற்றுபவர்கள் பிறர் சுரண்டலை ஒழித்து சுதந்திரமாக வாழ விழைகிறார்கள். எனவேதான் பிரிந்து வாழ நினைக்கிறார்கள் தென்னாட்டவர்கள்.” (விடுதலை 30.10.1948)

### தமிழ்ப் பெரியார்!

திரு.வி.கவைத் தமிழ்ப் பெரியார் என்று அழைத்தார் பெரியார். அந்த அடைமொழியைத்தான் கொடுத்தார். 13.9.1953 அன்று திரு.வி.கவுக்கு மிகப்பெரிய விழா எடுத்தார் பெரியார். தொழிற்சங்கத் தலைவர் அந்தோணி தலைமையில் திரு.வி.க. படத்தைத் திறந்து வைத்துப் பெரியார் பேசினார். திரு. வி.க. அவர்கள் மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய பண்பாடுகளைக் கொண்டவர் என்றார் பெரியார். தமக்கும் திரு.வி.கவுக்கும் 1919 முதல் நட்பு ஏற்பட்ட நிகழ்வுகளை விவரித்தார் பெரியார். சென்னை மாகாண சங்க வரலாறுகளை அடுக்கினார். இதனை முதல் பக்கத்தில் வெளியிட்ட விடுதலை **‘35 ஆண்டுகள் இரு பெரியார்களின் நட்புறவு’** என்று தலைப்பிட்டது. **– விடுதலை 14.9.1953**

இந்தப் படத்திறப்பு நடந்தது 13.9.1953. நான்கே நாளில் அதாவது 17.9.53 அன்று திரு. வி.க. மறைந்தார். அவ்வளவு பெரிய விழாவைப் பெரியார் ஏன் நடத்தினார்? எத்தகைய உள்ளுணர்வு அவரை அப்படி நடத்த வைத்தது? **“தமிழ்நாட்டில் ஆயிரமாண்டுக்கு ஒருமுறை தோன்றும் பெருந்தகை”** என்று **‘விடுதலை’** எழுதியது.

**‘திரு.வி.க.வின் முடிவு’** என்று அறிக்கை வெளியிட்டார் பெரியார். அன்றைய விடுதலையின் தலைப்புச் செய்தியே, ‘சென்னை நகரே கண்டிராத பிரம்மாண்டமான சவ ஊர்வலம் – பெரியார் தலைமையில் பல்லாயிர மக்கள் பின் தொடர்ந்தனர். – மறைந்த தமிழ்ப் பெரியாருக்கு மக்கள் காட்டிய இறுதி வணக்கம்’ என்று எழுதியது. அந்த ஊர்வலத்துக்கு பெரியாரே தலைமை வகித்து நடத்திச் சென்றார். ஈரோட்டில் இருந்து பெரியார் வந்திருந்தார். திராவிடர் கழகத்தவர், தொழிலாளர்கள் அதிகமாகக் கூடி இருந்தார்கள். தமது இறுதி நிகழ்ச்சிகளில் தமிழ்மறைகள் பாட வேண்டும் என்று திரு.வி.க. விரும்பியதாகத் தமிழறிஞர்கள் மு.வரதராசனாரும், அ.ச.ஞானசம்பந்தமும் பெரியாரிடம் சொன்னார்கள். தமிழ் மறைகள் பாடும் போது ஓரமாக உட்கார்ந்திருந்தார் பெரியார் (இதனை அ.ச.ஞா. தனது நூலில் விரிவாக எழுதியுள்ளார்.) **– விடுதலை 19.9.1953**

திராவிடத்தையும், தமிழையும் மோதவிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழ்த் தென்றல் திரு. வி.கவின் பேச்சைப் பதிலாகக் கூற முடியும்.

இந்த வரலாறுகளில் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி என்னவென்றால் நமக்குள் ஏற்படும் முரண்பாடுகளைத் தொலைநோக்குப் பார்வை யோடு இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக எப்படிக் கையாளப்போகிறோம். அதைச் சரியாகக் கையாண்டு எப்படி அடுத்தக்கட்டத்திற்குச் செல்ல போகிறோம் என்ற ஒரு புரிதலை உருவாக்கி கொள்வதற்கு இப்படிப்பட்ட வரலாறுகள் நமக்கு பயன்படும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

(நிறைவு)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## தமிழ்நாடு மாணவர் கழகம் வலியுறுத்தல்

# கல்வி நிலையங்களில் ஜாதி எதிர்ப்பு மய்யம்



**தமிழ்நாடு மாணவர் கழக கலந்துரையாடல் கூட்டம்! தமிழ்நாடு மாணவர் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் 30-11-2024 அன்று நங்கவள்ளி ஒன்றியம் வனவாசி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.**

இக்கலந்துரையாடல் கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு, சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில் மாணவர் கழகச் செயல்பாடுகள் குறித்தும், ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள விஸ்வகர்மா யோஜனா என்ற குலத் தொழில் திட்டத்தைப் பற்றியும் பல்வேறு வகையான மாணவர்கள் சார்ந்த சிக்கல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது, மாணவர் கழகத் தோழர்களின் பல்வேறு கேள்விகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்க உரையாற்றினார். இக்கலந்துரையாடல் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு மாணவர் கழகத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஈரோடு மாவட்ட மாணவர் கழக அமைப்பாளராக சர்மிளா, நங்கவள்ளி ஒன்றிய மாணவர் கழகப் பொறுப்பாளராக சுகந்தன் பிரபாகரன் ஆகியோரை கழகத் தலைவர் அறிவித்தார்.

**பங்கேற்ற மாணவர் கழகத்தினர்:**

**சேலம் மாவட்டம் :** சேலம் மாவட்ட மாணவர் கழக அமைப்பாளர்கள் ச.நாகராஜ், கவியரசு, மதிவதனி, சுகந்தன் பிரபாகரன், மா. சுசிகுமார், சர்மா, அருண்குமார், ஆனந்த், பாபு.

**சென்னை மாவட்டம் :** சென்னை மாவட்ட மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, அமைப்பாளர் இளவரசன், ச.நரேஷ் (எ) அழகிரி, ப.அன்பழகன், கா.செந்தாமரைக்கண்ணன், R.விக்னேஷ், மே.நித்தியேஷ், பிரவின். **கோவை மாவட்டம்:** கோவை மாவட்ட மாணவர் கழக அமைப்பாளர் நவின் குமார்.

**ஈரோடு மாவட்டம்:** ர.சர்மிளா, செ.கார்மேகம்.

**திருப்பூர் மாவட்டம் :** மாவட்ட மாணவர் கழகச் செயலாளர் கனல்மதி.

**தஞ்சாவூர் - பேராவூரணி :** தி.சியாம், பா.தங்கதீபக், பி.அகிலேஷ்வரன், கு.பிரபாகர், கா.கோபாலன்.

பிற்பகல் 3 மணிக்கு தொடங்கிய இந்த கலந்துரையாடல் கூட்டம் இரவு 7 மணி வரை நடைபெற்றது.

**தீர்மானங்கள்:**

**30.11.24 சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு மாணவர் கழகக் கலந்துரையாடல் கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானங்கள்:**

1) தமிழ்நாடு பாடத்திட்டத்தில் இட ஒதுக்கீடு மற்றும் சமூகநீதியைப் பாடமாகச் சேர்க்க தமிழ்நாடு அரசுக்குக் கோரிக்கை வைப்பது.

2) தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் 2015-க்கு பிறகு நடத்தப்படாமல் இருக்கும் மாணவர் பேரவைத் தேர்தல்களை நடத்தக்கோரி முற்போக்கு மாணவர் அமைப்புகள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களை ஒருங்கிணைத்து பேரணி நடத்தி அரசின் கவனத்திற்குக் கொண்டு சேர்ப்பது.

3) 2023-24 கல்வி ஆண்டில் தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்களில் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் ஆகியோரின் நியமனத்தில் 200 புள்ளி சுழற்சி முறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வகுப்பு வாரியாக நியமிக்கப்பட்டோரின் பட்டியலை RTI மூலம் கேட்டுப் பெறுவது.

4) மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வகுப்புவாரியாக சேர்க்கைப் பட்டியலை RTI மூலம் கேட்டுப் பெறுவது.

5) படித்து முடித்து வேலை வாய்ப்பிற்குத் தேவையான கூடுதல் படிப்புகளைப் பாடத்திட்டத்திலேயே சேர்த்து அதன்மூலம் தனியார் பயிற்சி நிறுவனங்கள் மாணவர்களின் பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

6) பொதுப் பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

7) பொறியியல் படிப்பிற்கான சேர்க்கையில் SC/ST மாணவர்களுக்கான கட்டணமில்லா முறையை கல்லூரிகளில் உறுதிப்படுத்துவது.

8) அரசு மருத்துவர்கள் அரசு செலவில் முதுநிலை மருத்துவக் கல்வி பயின்ற பின் உள்நாட்டில் குறிப்பிட்ட ஆண்டுகள் பணிபுரிய வேண்டுமென்பதைப் போன்றே IIT மற்றும் IIM-ல் படித்தவர்கள் உள்நாட்டில் குறிப்பிட்ட காலம் பணிபுரிய அரசாணை வெளியிட ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

9) பாடத்திட்டக் குழுவில் மாணவர் பிரதிநிதியும் வேலை வழங்கும் நிறுவனப் பிரதிநிதியும் இருக்க வேண்டுமென இந்தக் கூட்டம் தீர்மானம் இயற்றுகிறது.

10) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கல்வி நிலையங்களிலும் தொடக்கக் கல்வி “தாய்மொழிக் கல்வியாக” இருக்க வேண்டுமென தீர்மானம் இயற்றப்படுகிறது.

11) பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் Caste Anti-discrimination Cell செயல்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 2018இல் எச்.ராஜா ‘திமிர்’ கருத்து எதிர்வினையாற்றிய தோழர்கள்

திரிபுராவில் லெனின் சிலை உடைப்பை நியாயப்படுத்தி, தமிழ் நாட்டிலும் பெரியார் சிலை உடைக்கப்படும் என்று பதிவிட்டதைத் தொடர்ந்து அதற்கு எதிர்வினைகளும் எழுந்தன. சென்னையில் மயிலாப்பூர் பகுதியில் வர்ணாஸ்ரமத்தை அடையாளப்படுத்தி, தாங்கள், ‘பிராமண பிறப்பில்’ வந்தவர்கள் என்று அடையாளப்படுத்தும் ‘பூணூலை’ கழகத் தோழர்கள் சில பார்ப்பனர்களிடமிருந்து அறுத்து எதிர்வினையாற்றினர். இதில் இராவணன், உமாபதி, இராஜேஷ், பிரபாகரன் ஆகிய நான்கு தோழர்கள் காவல்துறையில் தாமாகவே முன்வந்து கைதாகினர்.

மயிலாடுதுறையில் ஆரிய இராமனை செருப்பாலடித்ததாக 14 தோழர்கள் கைது செய்யப்பட் டனர். மீத்தேன் எதிர்ப்பு கூட்டியக்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பங்கேற்றதால் அவரும் கைது செய்யப்பட்டார். மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மகேஷ், நடராசன், மகாலிங்கம், இளையராஜா, செந்தில் குமார், நாஞ்சில் சங்கர், விஜயராகவன், தில்லைநாதன், கார்த்திக், திராவிடன் ஜாஹிர், கவிஞர் முருகதாசன், சுப்பு மகேஷ் (தமிழர் உரிமை இயக்கம்), ராஜசேகரன் (மக்கள் அரசு கட்சி) ஆகிய 14 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். பூணூல் அறுப்பைக் கண்டித்து நடிகர் எஸ்.வி. சேகர் தலைமையில் மயிலாப்பபூரில் பார்ப்பனர்கள் பொதுக் கூட்டம் நடத்தினர். இராமன் படம் செருப்பால் அடிக்கப்பட்டதை எதிர்த்து மயிலாடுதுறையில் வணிகர்களை கடையடைப்பு செய்யுமாறு பா.ஜ.க.வினர் மிரட்டி கடைகளை மூட வைத்தனர். பல ஊர்களில் கழகத்தினர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். தோழர்களின் போராட்டம் வீண் போகவில்லை.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 06, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran